KRG சேமிப்புச் சான்றிதழ்				
உற்பத்தியின் தன்மை	**வாடிக்கையாளருக்கான நன்மைகள்**	**ஆரம்ப வைப்பும் கட்டணங்களும்**	**தகுதிகள்**	**முக்கிய விதிமுறைகளும் நிபந்தனைகளும்**
பெண்களுக்கான சேமிப்புச் சான்றிதழ்	• வட்டி வீதம் https://www.boc.lk/ratestariff#rupee-deposit-rates என்ற இணைப்பினூடாக அண்மைய வட்டி வீதத்தை அறிந்துகொள்ளலாம். முதிர்ச்சி காலம்-15 மாதங்கள் தனி வாடிக்கையாளர் பல சேமிப்புச் சான்றிதழ்களுக்கு விண்ணப்பிக்கலாம்	• **ஆரம்ப வைப்பு –** https://www.boc.lk/personal-banking/termdeposits/special-deposits/kantha-ran-ginumsavings-certificates என்ற இணைப்பின் ஊடாக வைப்பு பெறுமதியை பார்வையிடலாம். https://www.boc.lk/ratestariff#general-tariff **என்ற இணைப்பினூடாக கணக்கு பேணுகை மற்றும் பிற கட்டணங்களை அறிந்துகொள்ளலாம்.** **வரிகள்-** வட்டியானது அரசாங்கத்தின் மற்றும் அல்லது இலங்கை ஒழுங்குமுறை ஆணையத்தின் அல்லது இலங்கை வங்கியின் அவ்வப்போதான தேவைகளுக்கேற்ப பொருத்தமான முற்பண வருமான வரி, ஏனைய வரிகள் (AIT), கட்டணங்கள் (ஏதேனும் இருப்பின்) மற்றும் நியதிச் சட்ட தீர்வைகள் என்பவற்றின் கழிவுகளுக்கு உட்பட்டதாகும்.	• இலங்கையில் வதியும் 18 வயதுக்கும் மேற்பட்ட பெண்கள் இக்கணக்கை திறக்கலாம். வேலைவாய்ப்பு விசாவினை(புலம்பெயர்ந்தவர்களை தவிர்த்து) வைத்திருக்கும் இலங்கையில் வதிவில்லாத பெண்கள் இக்கணக்கை திறக்கலாம். தனிநபர் கணக்குகளை மாத்திரமே திறக்கலாம். கூட்டுக்கணக்கிற்கு அனுமதியில்லை. **கணக்கைத் திறப்பதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்** • காந்தா ரண் கினும் சேமிப்புக் கணக்குச் சான்றிதழுக்கான வங்கியின் விசேட கணக்குத் திறப்பு படிவங்களை பூர்த்தி செய்து பின்வரும் ஆவணங்களுடன் எந்தவொரு கிளையிலும் சமர்ப்பிக்கலாம். -தேசிய அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டை இலக்கம் குறிப்பிடப்பட்ட செல்லுபடியாகும் கடவுச்சீட்டு -குறிப்பிடப்படும் முகவரியானது தேசிய அடையாள அட்டையிலிருந்து வேறுபடுமாயின் முகவரி சரிபார்ப்பு ஆவணங்கள் -விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள நிரந்தர முகவரியானது குறித்த கிளையிலிருந்து வெகு தொலைவில் இருக்குமாயின் வாடிக்கையாளர் அக்கிளையில் கணக்கைத் திறப்பதற்கான தகுந்த காரணம்	இச் சான்றிதழ்களை புதுப்பிக்கவோ மாற்றவோ முடியாது முதிர்ச்சிக்கு முன் மீளப் பெறப்பட்டாலோ அல்லது முடிவுறுத்தப்பட்டாலோ வரியுடன் சரிசெய்யப்பட்ட நடைமுறையிலுள்ள சாதாரண சேமிப்பு வட்டி வீதத்திற்கு கீழே 1% என்ற வீதத்திலான வட்டியுடன் கணக்கிடப்படும் வைப்பு பெறுமதி வாடிக்கையாளருக்கு வழங்கப்படுகிறது . BOC காந்தா ரண் கினும் சேமிப்பு கணக்கிற்கு எதிராக முற்பணம் வழங்கப்படமாட்டாது. -இவ்வுற்பத்தியுடன் தொடர்புடைய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை கணக்குத் திறப்பு விண்ணப்பத்தில் அறிந்துகொள்ளலாம். -

காப்புறுதி வைப்பு / அங்கீகரிக்கப்படாத (தவறுதலான) கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் / செயற்படாக் கணக்குகள்

- வைப்புப் பொறுப்புகள், வைப்பாளர் ஒருவருக்கு அதிகபட்சம் 1,100,000 ரூபாய் வரையிலான நட்ட ஈட்டுக்கான பொருந்தக்கூடிய காப்புறுதியை செலுத்துவதன் மூலம் நாணயச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் காப்புறுதி செய்யப்பட்டுள்ளது.
- அங்கீகரிக்கப்படாத/தவறுதலான பரிவர்த்தனை ஒன்று கண்டறியப்பட்டால், அதனை உடனடியாக வங்கிக்கு அல்லது கணக்குப் பேணப்படும் கிளைக்கு தெரிவிக்க வேண்டும்.
- ஒரு (01) வருட காலத்திற்கு பணம் மீளப்பெறல்/கொடுப்பனவு செயற்பாடுகள் எதுவுமின்றி கணக்கு செயற்படுத்தப்படாமல் இருந்தால், ஒரு வருட முடிவில் குறித்த கணக்கு 'செயலற்ற' கணக்காக மாறும்.
- இவ்வாறான கணக்குகள் 10 வருடங்களுக்கு மேலாக செயற்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லை என்றால், அந்த கணக்குகளில் உள்ள நிதி கைவிடப்பட்ட சொத்தாக கருதப்பட்டு இலங்கை மத்திய வங்கிக்கு மாற்றப்படும்.

உங்களுடைய பின்னூட்டங்களை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

- பின்வரும் வழிகள் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் பின்னூட்டங்களையும் முறைப்பாடுகளையும் பகிர்ந்து கொள்ளலாம்;
- எங்கள் வாடிக்கையாளர் அனுபவ முகமைத்துவப் பிரிவு மூலம் உங்கள் பாராட்டுகள் / முறைப்பாடுகள் என்பவற்றை நீங்கள் பதிவு செய்யலாம். தானியங்கு அமைப்பு மூலம் உங்கள் கோரிக்கைகள் முன்னுரிமையுடன் கவனிக்கப்படும்.

தொலைபேசி: +94 11 220 4750 / +94 11 243 5814 தொலைநகல்: +94 11 243 5815 மின்னஞ்சல்: **bocexmgt@boc.lk** இணையத்தளம்: **https://www.boc.lk**

அஞ்சல்: வாடிக்கையாளர் அனுபவ முகாமையாளர், 22ஆவது மாடி, இலங்கை வங்கிக் கோபுரம், இலங்கை வங்கிச் சதுக்கம், இல. 1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.

எங்கள் கிளைகள், சேவைப் பிரிவு அல்லது அழைப்பு மையத்தைத் தொடர்பு கொள்ளுங்கள், எங்கள் கணக்குகள் அல்லது சேவைகள் தொடர்பான ஏதேனும் கருத்துகள்/சந்தேகங்கள் இருப்பின் எங்கள் கிளைகளை நாடலாம் அல்லது 1975 என்ற எண்ணின் ஊடாக அழைப்பு மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.